
**பாடம் 4** **ஏப்ரல் 18-24**



# வேதாகமத்தின் பங்கு

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** புல. 3:22, 23; 2தீமோ 3:15 17; யோவான் 17:17; எபே 1:13; சங் 119:11; 1கொரி. 2:14.

**மனன வசனம்:** தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. எபிரெயர் 4:12.

வேதாகமம். உங்களிடம் ஒரு வேதாகமப் பிரதியோ பல பிரதிகளோ நிச்சயம் இருக்கும். வரலாறு முழுவதும் இந்தப் புத்தகம் ரகசியமாக நகலெடுக்கப்பட்டிருக்கிறது, கடத்தப்பட்டிருக்கிறது, தடைசெய்யப்பட்டிருக்கிறது. இது உலகிலேயே எந்த மொழியிலும் அதிக அளவில் வெளியிடப்பட்ட புத்தகமாகும், மேலும் மிகப்பழமையானதும்கூட. வேதாகமம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகச் சிலர் தங்கள் உயிரையே தியாகம் செய்துள்ளனர்.

உங்களுடைய வாழ்க்கையில் வேதாகமத்திற்கு எந்த இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்? அதை வாசிக்கிறீர்களா அல்லது உங்கள் படுக்கைக்கு அருகில் வைக்கிறீர்களா அல்லது அலமாரியில் தூசி படிய வைத்திருக்கிறீர்களா? அதை வாசிக்க நேரமே இல்லாமல் இருக்கிறீர்களா அல்லது அதன் பக்கங்களைப் புரட்ட முடியாத அளவுக்குக் களைப்பாக உணர்கிறீர்களா?

தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது, வல்லமையானது, அது உங்களுடைய இருதயத்தில் பேசவும், உங்களை ஊக்கப்படுத்தவும், உங்களுக்கு அறைகூவல் விடுக்கவும், உங்களை மாற்றவும், உங்களுக்கு வழிகாட்டலையும் நம்பிக்கையையும் கொடுக்கவும் அதை அனுமதிக்கும்படி தேவன் உங்களை அழைக்கிறார்.

வேதாகமம் வெறும் பாடப்புத்தகமோ பழங்காலக் கதைகளின் தொகுப்போ அல்ல. மாறாக, பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் நம்மை எவ்வாறு தம்மிடம் நெருக்கமாக இழுக்கிறார் என்பதை அழகாகவும் ஆழமாகவும் சொல்கிற புத்தகம். தேவனோடுள்ள உங்கள் உறவில் வளர விரும்பினால், தினமும் அவருடன் பயனுள்ள நேரத்தைச் செலவிடுங்கள், ஜெபியுங்கள், ஏவுதலால் எழுதப்பட்ட அவரது வார்த்தைகளை வாசியுங்கள், அதன் போதனைகளின்படி உங்கள் சித்தத்தை அர்ப்பணியுங்கள்.

*2026, ஏப்ரல் 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# மிகவும் வல்லமையுள்ள ஆயுதம்

வேதாகமம் ஏன் மதிப்புமிக்கது, எவ்வாறு தனிப்பட்ட வேத ஆராய்ச்சியில் ஆழமாக ஈடுபடலாம் என்பதைப் பார்ப்பதற்குமுன் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்: சாத்தானுடைய மிகமுக்கியத் தாக்குதல்களில் ஒன்று, தேவனுடைய வார்த்தையைத் தியானிக்க நீங்கள் நேரம் செலவிடாதபடி தடுப்பதுதான். வேலைப் பளு, மெத்தனம், சோர்வு அல்லது சந்தேகம் ஆகியவற்றின்மூலம் மனிதர்களை வேதாகமத்தை வாசிக்காதபடி செய்வதே அவனது முதல் உத்தி. தேவ வார்த்தையை ஆராய்ந்து, அவருடன் நாம் நேரம் செலவிடும்போது, நம் வாழ்க்கை புதுப்பிக்கப்படு கிறது, நம் ஆத்துமாக்கள் ஊட்டமடைகின்றன என் பது தெரியும்; அதனால் அதைத் தடுப்பதற்கு அனைத்தையும் செய்வான்.

'வேதாகமத்தின் தெளிவான கூற்றுகள் சாத்தானுடைய ஏமாற்று வேலைகளை வெளிப்படுத்துவதால் மனிதர்கள் வேதாகமம்பற்றிய அறிவைப் பெறுவதைத் தடுக்க சாத்தான் சாத்தியமான எல்லா வழிகளையும் கையாளுகிறான்'. தேவனுடைய வல்ல மையான வார்த்தை தன்னை வல்லமையற்றவன் ஆக்குகின்றன; மனிதர்கள் தனக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய மிக வல்லமையான ஆயுதம் ஜெபமும் வேத ஆராய்ச் சியும் என்பதை சாத்தான் அறிவான். எபே 6:17,18; எபி 4:12. அதனால், நாம் வேதம் வாசிப்பதையும் ஜெபிப்பதையும் தடுக்க அனைத்தையும் செய்கிறான். தேவ வார்த் தைகள் வல்லமைமிக்கவை, அவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகள் இந்த உலகத்தை உருவாக்கின, அவை மரித்தோரை எழுப்பக்கூடியவை, நாம் ஜெயங்கொள்ள பெல னளிப்பவை என்பதையும் அறிவான். சங் 33:6; யோவான் 11:41-44; மத் 4:1-11.

மனிதர்களை வேதாகமத்தை வாசிக்காதபடி செய்வதால், தேவனோடு மட்டு மல்ல, மற்றவர்களோடு உறவையும் சிதைக்கிறான். திருமண வாழ்க்கையில் பாதிப்பு உண்டாகிறது, பிள்ளைகளிடம் எரிந்து விழுகிறோம், நண்பர்களுடன் அல்லது சக ஊழியர்களுடன் பொறுமையாக நடக்கமுடிவதில்லை. வாழ்க்கை மிகமிக பரபரப்பான தாகத் தெரிகிறது; மனஅழுத்தமும் பாரமும் அழுத்துகின்றன, தப்பிக்க வழியே இல் லாததுபோலத் தெரிகிறது. இவ்வாறு நிகழ்வதை நின்று உணரக்கூட நமக்கு நேரமிருப்ப தில்லை! நாம் தேவனுக்கு நெருக்கமாக இருப்பதாக நினைக்கலாம், ஆனால் உண் மையில், தேவனுடைய வார்த்தையைத் தியானிக்காமல் நாட்களும் வாரங்களும் கடந்து செல்லும்போது, ஒவ்வொரு நாளும் அதிகம்அதிகமாகப் பெலவீனமடைகிறோம்.

**நாம் இவ்வாறு தேவனோடுள்ள உறவில் ஏற்றமும் தாழ்வுமாக, முன்னும் பின்னுமாகச் செல்லும்போது, புலம்பல் 3:22,23 சொல்வதுபோல அவர் கொஞ்சமும் மாறாத அற் புதராக இருக்கிறார். இந்த வசனங்கள் சொல்லும் கருத்து என்ன, அதை நம் மனித இயல்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்ன புரிகிறது?**

லூசிபர் தான் விழுவதற்குமுன் காப்பாற்றுகிற கேருபாக இருந்தான். எசே 28:14-17. தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டான், அவற்றின் எல்லையற்ற வல்லமையை அறிந்திருந்தான். அவன் இப்போது இந்தச் சத்தியத்தை வெறுக்கிறான்; எனவே, நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கவும், அவற்றின்படி நம் அன் றாட வாழ்க்கையில் நடக்கவும் தவறும்போது, நமது மனம் மரத்துப் போவதற்கும், நமது இதயம் மந்தமாவதற்கும் காரணம் தெளிவாகிறது.

---

**உங்களுடைய தியான வாழ்க்கையில் எவ்வளவு தூரம் முன்னும் பின்னுமாக சீரில்லாமல் இருக் கிறீர்கள்? தேவைப்பட்டால், சில மாற்றங்களைச் செய்யவேண்டியதுபற்றி உங்களுடைய பதில் என்ன சொல்கிறது?**

# வேதாகமமே அதிகாரம்

**வேதாகமத்தின் அதிகாரம், செயல்பாடுபற்றி அதன் பக்கங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. 2தீமோ 3:15-17ஐ வாசித்து, எழுதுங்கள். வேதாகமத்தின் செயல்பாடுபற்றி அந்த வசனங்கள் சொல்வதைக் குறிப்பெடுங்கள்.**

வேதாகமம் நமது நோக்கங்களுக்காக அல்லது நமது கருத்துக்களுக்காகப் பயன்படும் என்று எதிர்பார்த்து வேதாகமத்தை ஆராயக்கூடாது; ஏனெனில் நம் நோக்கங்கள் தேவனுடைய நோக்கங்களோடு எப்போதும் ஒத்துப்போவதில்லை. உதாரணமாக, 'கண்களை மூடிக்கொண்டு ஒரு வசனத்தைச் சுட்டிக்காட்டும்' முறையை பயன்படுத்தக் கூடாது; ஏனெனில், தேவன் தமது வார்த்தையின்மூலம் நம்முடன் தொடர்புகொள்ள விரும்பும் விதம் இதுவல்ல. தேவன் நம் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்றபடி ஆடுகிற ஒரு கைப்பாவை பொம்மை அல்ல. அவருடைய வழிகளும் எண்ணங்களும் நம்முடையதை விட மிக உயர்ந்தவை ஏசா 55:9. எனவே, அவர் நமக்குச் சொல்லும் வார்த்தைகளை நாம் ஒருபோதும் கட்டுப்படுத்த முயலக்கூடாது. அதேபோல், வேதாகமத்தில் நமக்கு வசதியாகத் தோன்றுகிற பகுதிகளைமட்டும் தேர்ந்தெடுத்து நடக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, வேதாகமத்தை ஒரு முழுமையான தொகுப்பாகப் பார்க்கவேண்டும்; எளிமையான மற்றும் பழக்கமான வசனங்களைமட்டும் வாசித்துவிட்டு, நம்மை எச்சரிக்கிற அல்லது சவாலாக இருக்கிற பகுதிகளை தவிர்த்துவிடக்கூடாது. தேவன் நம் வாழ்க்கையில் பேசவேண்டும் என்று நாம் விரும்பினால், வேதாகமத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதோடு, கவனமாக வாசிப்பதற்கு சரியான முறைகளைக் கையாளவேண்டும். நமக்கு என்ன தேவையோ அதைச் சரியான நேரத்தில் தேவன் வெளிப்படுத்துவார் என்று அவரை நம்பவேண்டும்.

'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக' என்று இயேசு சொன்னார். மத் 22:37. அதற்காக, நாம் நம் அறிவைப் பயன்படுத்தாமல் இருப்பதை, தேவன் விரும்புவதில்லை; மாறாக, தமது வார்த்தையில் குறிப்பிட்ட அளவுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தமது பரந்த அறிவும் ஞானமும் நமது சிந்தனையை நிரப்ப அவர் விரும்புகிறார். ஏனோக்கு, ஆபிரகாம், மோசே மற்றும் யோபு போன்றவர்களுடன் தேவன் பேசியதையும், இயேசு மக்களுடன் பேசியதையும் குறித்த பல வேதாகமச் சம்பவங்களை நாம் வாசிக்கமுடியும். தேவன் மனிதனுடைய பகுத்தறிவுக்கு வேலையில்லாமல் செய்வதில்லை; மாறாக, நமது இரட்சிப்பு 'நிறைவேறப் பிரயாசப்படும்போது', நமது அறிவை அவருடைய வார்த்தைக்கும் ஞானத்திற்கும் கீழ்ப்படியச் செய்யுமாறு அவர் நம்மை அழைக்கிறார்.

மனித பகுத்தறிவில் தவறுக்கும் வஞ்சனைக்கும் வாய்ப்புள்ளது. அது தவறே செய்யாது என்று சொல்லமுடியாது. மனிதப் பகுத்தறிவு தேவனைப் புறந்தள்ளிவிட்டு, எல்லாவற்றையும் தானே சரிசெய்துகொள்ள முயற்சிக்க வாய்ப்புள்ளது; சிந்திக்கவேண்டிய சூழலில், தேவனுக்குச் சமமாகவோ அல்லது அவருக்கு மேலாகவோ தன்னைக் கருதுகிறது. மனிதர்கள் அகந்தையுடன், விமர்சிக்கும் மனப்பான்மையுடன் வேதத்தை அணுகக்கூடும்; தாங்கள் ஏற்கனவே அனைத்தையும் கேட்டுவிட்டதாகவும், புதிதாகக் கற்றுக்கொள்ள ஏதுமில்லை என்றும் நினைக்கக்கூடும். மனிதர்கள் தங்களை முக்கியமானவர்களாக, தன்னம்பிக்கை உள்ளவர்களாக, தற்சார்பு உடையவர்களாக, எதுவும் தேவையற்றவர்களாக உணரும்போதுதான், தேவனோடுள்ள நமது உறவைப் புறக்கணிக்கிறோம்; மேலும் நமது வரையறுக்கப்பட்ட அறிவையும் தவறான பகுத்தறிவையும் சார்ந்து இருக்கிறோம்.

# வேதாகமச் சத்தியம்

1960-களில் இருந்த சில தாராளவாத இறையியல் வல்லுனர்களிடையே, தேவனை இறையியல் துறையிலிருந்து ஒதுக்குகிற ஒரு போக்கு நிலவியது. 2017 -ஆம் ஆண்டு, டைம் இதழின் அட்டைப்படக்கட்டுரை, 'சத்தியம் செத்துவிட்டதா?.' என்ற தலைப்பில் வெளியானது. சுவாரஸ்யம் என்னவென்றால், இந்தப் போக்கு இன்றைய நமது சமூகத்தின் நிலையைக் காட்டுகிறது. 'சத்தியம்' என்கிற கருத்தாக்கமே அந்தளவுக்குச் சிதைந்து வருவதால், எது உண்மை என்று எவருக்கும் தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய கலாச்சாரத்தின்படி, காலத்தின் சோதனைகளைத் தாக்குப்பிடிப்பதற்கு நாம் சார்ந்து இருக்கக்கூடிய நிலையான அளவுகோலோ அல்லது அஸ்திவாரமோ எதுவுமே இல்லை. ஆனால் இதற்கு மாறாக இயேசு, 'நானே சத்தியம்' என்று சொன்னார். யோவான் 14:6. அவர் முற்றிலும் சுத்தமான சத்தியம் என்று அவரது வார்த்தை அவரைப்பற்றிச் சாட்சியிடுகிறது.

**பின்வரும் வசனங்களை மெதுவாக வாசியுங்கள், பிறகு அவற்றை இரண்டாம் முறை வாசியுங்கள். அந்த வசனங்கள் சொல்கிற செய்தி என்ன?**

**யோவான் 17:17**______________________________

**நீதி 30:5, 6**______________________________

**சங் 12:6**______________________________

அடிப்படை சத்தியமாகிய இயேசு மாறுவதில்லை என்று வேதாகமம் கூறுகிறது. எபி 13:8. அதே நேரம், தேவ வார்த்தையை நாம் வாசிக்கும்போது, தேவனையும் அவரது சத்தியத்தையும்பற்றிய புரிதல் வளரும். ' இன்னும் கண்டறியப்படாத சத்தியத்தின் சுரங்கங்கள் நிறைய உள்ளன; ஊக்கமுடன் தேடும் ஒருவர்மட்டுமே அவற்றைக் கண்டுபிடிக்கமுடியும்'[1]. சத்தியத்தை தேவன் தம் வார்த்தையின்மூலம் கொடுத்திருப்பதாகவே எலன் ஒய்ட் எப்போதும் குறிப்பிடுகிறார். தேவனுடைய வார்த்தை கடந்தகால சத்தியங்களுக்கு முரணாக இருப்பதில்லை, மாறாக அவற்றின்மீது கட்டப்படுகின்றன என்பதால் வேதாகமத்தில் கூடுதல் வெளிச்சத்தை நாம் தேடலாம்.

**1 தெச 2:13; சங் 33:4, 5; எபே 1:13 வசனங்கள் சொல்கிற செய்தி என்ன?**

________________________________________

இறுதியாக, நாம் எதைச் சத்தியம் என்று புரிந்து கொள்கிறோமோ, அதற்கு வேதாகமம், வேதாகமம் மட்டுமே அடிப்படை ஆதாரமாக இருக்கவேண்டும். மற்ற அனைத்து ஆதாரங்களும் தேவனுடைய வார்த்தையினால் சோதித்துப் பார்க்கப்படவேண்டும். நாம் 'பகுத்தறிவு' என்று கருதுவதைக்கூட தேவனுடைய வார்த்தையைக் கொண்டுதான் சோதிக்கவேண்டும்.

---

**சத்தியம் என்று எதுவுமில்லை என்று சிலர் வாதிட விரும்புகிறார்கள். இந்தக் கூற்று ஏன் தனக்குத் தானே முரணானது? அதாவது, சத்தியம் என்று எதுவுமில்லை என்று ஒரு கருத்தைக் கூறுவதே சத்தியத்தை அறிவிக்கிற முயற்சியாகும்; எனவே அந்தக் கூற்று எப்படி தன்னைத்தானே பொய்யாக்குகிறது?**

# வேதாகமத்தின் கோரிக்கைகள்

ஒரு பெரிய தீர்மானம் எடுப்பது, உறவு சம்பந்தமாக ஒரு சிக்கலைத் தீர்ப்பது, அல்லது ஒரு சவாலான சூழலை எதிர்கொள்வது போன்ற நேரங்களில் வேதாகம ஆலோசனைக்குச் செவிசாய்த்தால், உங்கள் குடும்பத்தில் என்ன மாற்றம் நேரிடும்? மனிதர்கள் உலகத்தைப் பார்ப்பதற்கும், வாழ்க்கைக்கான வழிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் வேதாகமத்தை ஆராய்ந்தால் உங்கள் பணியிடத்திலும் அல்லது சபையிலும் என்ன மாற்றம் உண்டாகும்? வேதாகம வார்த்தைகளின் மதிப்பை வேத ஆசிரியர்கள் அறிந்திருந்தார்கள். வேதாகமத்தின் வார்த்தைகளைப்போல வேறு எந்தப் புத்தகமும் வாழ்க்கைக்கு ஆலோசனை சொல்லமுடியாது. உங்கள் வேதாகமத்தில் அந்த வார்த்தைகள் இருக்கலாம், ஆனால் அவற்றை எவ்வாறு உங்கள் இருதயத்தில் நீங்கள் பத்திரப்படுத்த முடியும்?

**சங்119:11இல் தாவீது சொல்கிற ஆலோசனை என்ன, அதை நீங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கலாம்? எபி 4:12.**

வேதாகமம் தன்னைப்பற்றி வைக்கிற கோரிக்கைகளில் ஒன்று எபி4:12 இல் உள்ளது. இருபுறமும் கருக்கான பட்டயம் கூர்மையானது, ஆற்றல்மிக்கது; ஆனால் மனித ஆத்துமாவில் மனித கருவிகள் செய்யமுடியாததை வேதாகமம் செய்யமுடியும். வேதாகமம் ஜீவனுள்ளதாம். ஆனால் அது ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன் எழுதப்பட்டதால், அது எப்படி உண்மையாக இருக்கமுடியுமென நீங்கள் யோசிக்கலாம். ஆனால் இயேசு, 'ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது' என்று சொன்னார். யோவான் 6:63. உங்கள் இருதயம் உடைந்திருந்தால் அல்லது உங்கள் வாழ்க்கை சிதைந்து போயிருந்தால், தேவன் தமது வார்த்தைகளை உங்கள் வாழ்க்கையில் பேசி எல்லாவற்றையும் மாற்றியமைக்க முடியும். பழைய ஏற்பாடும் தேவனுடைய வார்த்தைகள் மிகவும் ஆற்றல்மிக்கவை என்றும், அவை ஒருபோதும் செயலற்று நிற்கவோ, செயலற்ற போகவோ இல்லை என்றும் விவரிக்கிறது. ஏசா 55:11. தேவ வார்த்தைகள் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தின தாக்கத்தைப்பற்றி தியானித்து, தாவீது இவ்வாறு எழுதினார்: 'அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது'. சங் 119:50.

பசி, பட்டினி, உணவுக்கட்டுப்பாடு என எதுவாகவும் இருக்கட்டும். பசியோடு இருந்த பிறகு உண்ணும் உணவு மிகவும் ருசியாக இருக்கும் அல்லவா? அதேபோல ஆன்மீக ரீதியில், வேதாகமம் நம் ஆத்துமாவிற்கான உணவாகும். உங்கள் ஆத்துமா வெறுமையாகவும் பசியுடனும் இருந்தால், ஜீவனுள்ள தேவ வார்த்தையைத் திறந்து வாசியுங்கள். எரே 15:16; 1பேதுரு 2:2; மத் 4:4.

தேவ வார்த்தைகள் மனதிற்கும் இருதயத்திற்கும் ருசியாக இருக்கும், அவற்றை நாம் வாசிக்கும்போது, வாக்களிக்கப்பட்டபடி நம்மை நிரப்பி, நம்மைத் தாங்கி நடத்தும். தேவ வார்த்தையாகிய வேதாகமத்திலுள்ள செய்திகள் தேவனிடமிருந்துதாமே வருகின்றன. தேவன் அவற்றை நமக்காகவும், அவரைத்தேடுகிற மற்ற ஒவ்வொருவருக்காகவும் பிரத்தியேகமாக அனுப்பியுள்ளார். நாம் அவற்றை ஜெபத்தோடும், திறந்த மனதோடும் வாசிக்கும்போது, அந்த வார்த்தைகள் வீணாகப் போகாது.

---

**நீங்கள் தினமும் எவ்வளவு நேரத்தை வேதாகமத்தைத் தியானிக்கச் செலவிடுகிறீர்கள், அந்த நேரத்தை எவ்வாறு கழிக்கிறீர்கள்? அந்த நேரத்தை ஆவிக்குரிய ரீதியில் மிகவும் பயனுள்ளதாக மாற்ற நீங்கள் என்ன செய்ய முடியும்?**

# இருதயத்தின் நிலை

நாம் வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கும்போது நம் இருதயம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பொறுத்தே தேவனுடைய வார்த்தையிலிருந்து அறிவுரைகளை எவ்வளவு தூரம் நம்மால் பெறமுடியும் என்பது அமைகிறது. யோபு 22:22. இதை 1கொரி 2:14 எவ்வாறு விவரிக்கிறது?

ஆவிக்குரிய பகுத்தறிவு என்பது, ஆவிக்குரிய உட்சுருக்கத்தையும், புரிதலையும் பெற்றிருப்பதாகும். எனவே, ஆவிக்குரிய ரீதியாக திறந்த மனதுடைய ஒருவர் வேதாகமத்தை வாசிக்கும்போது பெறுகிற கருத்துக்கள், ஆவிக்குரிய ரீதியில் குறுகிய மனப்பான்மை உடைய ஒருவர் பெறுகிற கருத்துகளைவிட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்பது புரிகிறது. வேதாகமம் முட்டாள்தனமானது என்று நினைப்பவர், அதன் பக்கங்களில் உள்ள சத்தியங்களைத் தேடமாட்டார்.

**எனவே தேவனோடுள்ள உறவில் வளருவதற்கு வேதாகமத்தின்மீதான நம் மனநிலையும், அதை வாசிப்பதில் நாம் கடைப்பிடிக்கிற அணுகுமுறையும் மிகவும் முக்கியம். 1தெச 2:13இல் பவுல் எவ்வாறு இதை விளக்குகிறார்?**

நாம் விசுவாசிக்கும்போது தேவ வார்த்தை நமக்குள் கிரியைசெய்கிறது. நீங்கள் வேதாகமத்தைத் திறந்து, அதன் பக்கங்களில் உள்ள வார்த்தைகள்மூலம் தேவன் உங்களுடன் பேச விரும்புகிறார் என்று விசுவாசிக்கும்போது, அவர் நிச்சயமாகவே உங்களுடன் பேசுவார், உங்கள் வாழ்க்கையில் கிரியைசெய்வார். ஆனால் அது முற்றிலும் உங்கள் விசுவாசத்தையும் உங்கள் எதிர்பார்ப்புகளையும் சார்ந்தது. நல்ல செய்தி என்னவென்றால், உங்கள் விசுவாசம் சிறியதாக இருந்தால், அது கடுகளவு சிறிதாக இருந்தாலும், அது வளருவதற்கு தேவன் உதவ முடியும். லூக் 17:6; மாற்கு 9:24.

வேதாகமத்தின் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்று, தேவனோடுள்ள நமது உறவின் நிலைகுறித்தும், அந்த உறவை பலப்படுத்துகிற விதம்குறித்தும் நம் வாழ்வில் உண்மையை எடுத்துரைப்பதாகும். உங்கள் இருதயம் பரிசுத்த ஆவியானவருக்குத் திறந்திருந்தால், நீங்கள் தாழ்மையுடன் வேதாகமத்தை ஆராய்ந்தால், உங்களால் உடனடியாக உணரமுடியாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் உங்களில் மாற்றம் உண்டாகும். அத்தகைய மாற்றமும் வளர்ச்சியும் பெரும்பாலும் படிப்படியாகவே நிகழ்கின்றன. ஆனால், நாம் மெத்தனமாக, தொடர்ந்து பாவம் செய்துகொண்டு, மாற விருப்பமில்லாமல் இருந்தால், வேத வாசிப்பு நமக்குக் குறைவான நன்மையையே தரும். இயேசு கிறிஸ்துவிடம் இன்னும் நெருங்கிச் செல்லும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தூண்டுகிறார். நாம் அவரை நெருங்கிச்செல்ல விரும்புகிறோமா? அப்படிச்சென்றால், நாம் ‘இரட்சிப்புக்கேதுவான ஞானமுள்ளவர்களாக’ (2 தீமோத்தேயு 3:15) மாறுவோம்; மேலும், நாம் கற்பனை செய்து கூட பார்த்திராதவற்றைக் காண்போம்.

---

**நான் வேதாகமத்தை வாசிக்கும்போது என் மனநிலையும், இருதயநிலையும் எப்படி இருக்கிறது? நான் எனது கருத்துக்களைச் நியாயப்படுத்தும் நோக்கத்தோடு வேதாகமத்தை அணுகுகிறேனா, அல்லது இன்று தேவன் எனக்குச் சொல்ல விரும்புவதைக் காண்பதற்கு ஒரு சிறுபிள்ளையின் விசுவாசத்தோடும் திறந்த மனதோடும் வாசிக்கிறேனா? இதற்கான பதில் ஏன் அவ்வளவு முக்கியமானது?**

# மேலும் படிக்க:

கடந்த 24 மணிநேரத்தில் நீங்கள் பேசிய வார்த்தைகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? அவை அன்பும், கனிவும், மகிழ்ச்சியும், உற்சாகமூட்டும் வார்த்தைகளாக இருந்தனவா? அல்லது விரக்தி, சோர்வு, கவலை, கோபம், புறம்பேசுதல் அல்லது வஞ்சகம் நிறைந்தவையாக இருந்தனவா? 'இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'. மத் 12:34. நம் இருதயத்தில் தேவையற்ற குப்பைகள் இருக்கும்போது, அவை வார்த்தைகளின் வழியே வெளிப்படுகின்றன.

நம்மில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தருணத்தில் விரக்தி, சோர்வு அல்லது மன அழுத்தத்தை அனுபவித்திருப்போம்; அந்த மனநிலை நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை மாற்றியமைக்கிறது; அவை பெரும்பாலும் நாம் பின்னாளில் வருத்தப்படும் வார்த்தைகளாகவே இருக்கும். இதற்கு நேர்மாறாக, நம் இருதயம் ஒருவரிடம் காட்டும் அன்பினால் பொங்கி வழியும்போது, அது நம் வார்த்தைகளின் வழியாகத் தடையின்றிப் பாய்கிறது.

அதேபோல, தேவனுடைய வார்த்தை அவருடைய இருதயத்தைப்பற்றியும் நம் மீதான அவருடைய எண்ணங்களைப்பற்றியும் பேசுகிறது. தேவனுடைய இருதயத்திலிருந்து நேரடியாக வந்த அந்த வார்த்தைகள், வேதாகமத்தின் வாயிலாக நமக்குக் கிடைத்துள்ளது.

'வேதாகமத்தை நல்ல அறநெறிப் போதனைகள் கொண்ட ஒரு புத்தகமாகவும், காலத்தின் சூழலுக்கும் உலகில் நமது நிலைக்கும் ஏற்பப் பின்பற்றவேண்டிய ஒன்றாகவும் கருதுவது ஒரு வகை; ஆனால், உள்ளபடியே, அதை ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையாகவும், நமது ஜீவனாகவும், நமது செயல்களையும், வார்த்தைகளையும், எண்ணங்களையும் செதுக்கவேண்டிய வார்த்தையாகவும் கருதுவது முற்றிலும் வேறொரு வகை. தேவவார்த்தையை இதற்குக் குறைவான ஒன்றாகக் கருதுவது, அதை நிராகரிப்பதற்குச் சமம். அதை விசுவாசிப்பதாகச் சொல்பவர்களே இவ்வாறு நிராகரிப்பதுதான், இளைஞர்களிடையே சந்தேகம் மற்றும் அவிசுவாசம் ஏற்படுவதற்கு முதன்மையான காரணங்களில் ஒன்றாக இருக்கிறது'.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *உங்கள் விசுவாசத்திற்கு உங்களிடம் உள்ள தர்க்கரீதியான மற்றும் அறிவுப்பூர்வமான காரணங்கள் என்னென்ன?*

2 *வேத வாசிப்பும் ஜெபமும் தேவன் மீதான உங்கள் உறவின் அடித்தளமாக இருப்பதை நீங்கள் எவ்வாறு உறுதிசெய்ய முடியும்? ஜெபம் மற்றும் வேதவாசிப்பு இல்லாமல் தேவனோடு உங்களால் உறவைப் பேணமுடியுமா?*

3 *கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நீங்கள் எவ்வாறு பிழைக்கமுடியும்? உபாகமம் 8:3.*

3 *தேவனுடைய வார்த்தைகள்பற்றி பின்வரும் வசனங்கள் சொல்வது என்ன? எபி 11:3; சங் 33:6; மத் 11:4, 5; 1தெச 4:16; எபே. 6:17; யாக் 1:21.*

**பாடச்சுருக்கம்:** வேதாகமம் ஜீவனுள்ளது, வல்லமையுள்ளது, அதை வாசிப்பது தேவனுடன் நம் உறவு வளருவதற்கு அடிப்படையானது. அது தேவனுடைய அற்புதமான குணாதிசயங்களைப் பற்றியும், பூமியின் வரலாற்றில் அவர் மனிதகுலத்துடன் கொண்டிருந்த தொடர்புகளைப்பற்றியும் நமக்குக் கற்றுக்கொடுப்பது மட்டுமல்லாமல், நாம் தாழ்மையான அணுகுமுறையுடன் அதை வாசிக்கும்போது இன்று நம் ஒவ்வொருவருடனும் அது தனிப்பட்ட முறையில் பேசுகிறது.

# சிறைவாசம்

**கரோல் டி ஒலிவேரா**

இயேசுவைப்பற்றிப் பகிர்ந்துகொண்டதற்காக நீங்கள் ஒரு சிறை அறையில் அடைக்கப்படுவதை உங்களால் கற்பனைசெய்ய முடியுமா? தெற்கு ஆசியா–பசிபிக் டிவிஷனில் உள்ள ஒரு ‘மறைக்கப்பட்ட நாட்டில்’ பணியாற்றும் உலகளாவிய ஊழிய முன்னோடிகளுக்கு இது ஒரு சாதாரண நிகழ்வு. அங்குள்ள ஊழியர்களின் உயிர் மற்றும் ஊழியத்தைப் பாதுகாப்பதற்காக அந்த நாடு ’மறைக்கப்பட்ட நாடு’ என்று அழைக்கப்படுகிறது. ஊழிய முன்னோடிகள் என்பவர்கள், நற்செய்தி சென்றடையாத மக்களிடையே புதிய விசுவாசக் குழுக்களைத் தொடங்க அனுப்பப்படும் சாதாரண மக்கள் ஆவர்.

சமீபத்தில், சோங் என்ற முன்னோடியும், உள்ளூர் கான்ஃபரன்ஸின் இயக்குநரான பீட்டரும், அந்த நாட்டின் வடக்குப் பகுதிக்கு அங்குள்ள ஒரு புதிய சபை உறுப்பினர்களைச் சந்திக்கச் சென்றனர். சோங்கும் பீட்டரும் அங்கிருந்த உறுப்பினர்களுடன் இரவு உணவு சாப்பிட்டபோது, மூன்று குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைக்க விரும்புவதைக் கேள்விப்பட்டனர். அவர்கள் தங்களது ஆவி வழிபாட்டுப் பொருட்களை எரிக்கத் தயாராக இருப்பதை அறிந்த சோங், அன்றிரவே அவர்களைச் சந்திக்க முடிவு செய்தார். சோங், பீட்டர் மற்றும் சபையின் சில உறுப்பினர்கள் அந்த மூன்று குடும்பங்களின் வீட்டிற்குச் சென்றபோது, ஒரு சபை உறுப்பினர் தனது குடும்பத்தினரும் இயேசுவைப்பற்றி அறிய விரும்புவதாகக் கூறினார். எனவே, அந்த மூன்று குடும்பங்களைச் சென்றடைவதற்கு முன்பாக, அவர்கள் அந்த உறுப்பினரின் வீட்டிற்குச் சென்று அவரது உறவினர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டனர். இறுதியாக, அந்தக் குழு அந்த மூன்று குடும்பங்களின் வீடுகளைச் சென்றடைந்தது. நேரம் தாமதமாகியிருந்தது, ஆனாலும் அந்த மக்களின் மலர்ந்த முகங்கள் சோங்கின் உள்ளத்தைக் குளிரச்செய்தன; அவர்களின் ஆர்வம் அவரது மனதிற்கு புத்துயிர் அளித்தது. அவர்கள் ஒரு நெருப்பைச் சுற்றி அமர்ந்திருக்கையில், சோங்கை பீட்டர் அறிமுகப்படுத்தி, அவர்கள் இயேசுவிடம் முழுமையாகத் தங்களை ஒப்படைக்க உதவுவதற்காக அவர் அங்கு வந்திருப்பதாகக் கூறினார்.

“நாங்கள் எங்கள் இருதயங்களை இயேசுவிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், நாங்கள் உலக ஆவிகளின் பின்னால் செல்லாமல், இயேசுவை முன்னிறுத்தி ஒளியில் நடப்போம்” என்று குடும்பத்தின் மூத்தவர் கூறினார். சோங் அந்தக் குடும்பத்தினருடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஒருவன் திடீரென அறைக்குள் வந்து, சோங்கைத் தங்கள் இனத்தின் தலைவரின் வீட்டிற்கு வருமாறு கட்டாயப்படுத்தினான்.

மணிநேரங்கள் கடந்தோடிய நிலையில், இனத்தலைவருடனான சந்திப்பு அவ்வளவு நேரம் நீடிப்பது குறித்து கவலையடைந்தனர். இறுதியாக, சோங் இனத் தலைவரின் வீட்டில் சிறைவைக் கப்பட்டிருப்பதை அவர்கள் அறிந்தனர். அந்த இரவு முழுவதும், சபையார் சோங்கிற்காக உருக்கமாக ஜெபித்தனர். வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைக்காக அவர் ஒரு காவல் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

தேவனுடைய கிருபையினால், நான்கு நாட்களுக்குப் பிறகு சோங் விடுவிக்கப்பட்டார். இன்று, அவர் சிறை வைக்கப்பட்டிருந்த அதே கிராமத்தில் 100–க்கும் மேற்பட்டவர்கள் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறார்கள்! சிறைவாசம் சோங்கை இயேசுவைப்பற்றிப் பேசுவதிலிருந்து தடுத்து நிறுத்தவில்லை.